
# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி – 1



பதிப்பாசிரியர்

முனைவர் ஆ. சரவணன்

**தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு**

**(தேசியக் கருத்தரங்கம்)**

முதன்மைப் பதிப்பாசிரியர் : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. சரவணன்**
பதிப்புரிமை : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018
வெளியீடு : **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641 029.
கணினியாக்கம் : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XXVI + 432 = 458
விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 89 - 9**

**Tribes of Tamil Nadu ; History Society and Culture**

Chief Editor : **Dr. S. Arichandran**
Editor : **Dr. A. Saravanan**
Copyright's : **Dr. S. Arichandran**
First Edition : August, 2018
Published : **Department of Tamil (SF)**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XXVI + 432 = 458
Prize : **Rs. 400/-**

12. அட்டப்பாடி இருளர் பழங்குடி மக்களின் பாரம்பரியமும் பண்பாடும் 112

**முனைவர் பெ. சுரேஷ்**

13. கிருட்டினகிரி மாவட்ட இருளர் மக்களின் சடங்குகள் 120

**ஆ. மீனா**

14. இருளர் பெண்களின் சடங்குகளும் உரிமைகளும் 131

**முனைவர் ஜெ. நிஷாந்தினி**

15. இருளர் பழங்குடிகளின் வாழ்வியலும் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வாழ்வியல் எச்சங்களும் 137

**த. சுரேஷ்குமார்**

16. வலசமலை மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் சடங்குகள் 141

**முனைவர் த. பாலமுருகன் & சங்கீதா**

17. இருளர்களின் இறப்புச் சடங்கு முறைகள் 147

**செ. சசிகுமார்**

18. தாணிக்கண்டி இருளர்களின் வாழ்வியல் 153

**மந்தராச்சலம்**

19. மாம்பாக்கம் இருளர்களின் பண்பாடும் திருவிழாவும் 157

**ச. காவியா**

20. கல்லாறு இருளர் பழங்குடி மக்களின் மரபும் மாற்றமும்164

**முனைவர் த. பிரியா**

21. இருளர் மக்களின் பண்பாட்டுப் பதிவுகள் 168

**ப. வேல்விழி**

22. கடம்பன் கோம்பை இருளர்களின் கலங்காத பண்பாடு 174

**ஜெயப்பிரியா**

23. இரவாளப் பழங்குடிகள் ஓர் அறிமுகம் 179

**முனைவர் த. விஜயலட்சுமி**

24. ஊராளி மக்களின் பிறப்புச் சடங்கு 184

**முனைவர் எம். பழனிச்சாமி**

25. காடரும் வாழ்வியலும் 189

**முனைவர் கி. விஸ்வநாதன் திரு. ப. அச்சுதன்**

# 14. இருளர் பெண்களின் சடங்குகளும் உரிமைகளும்

**முனைவர் ஜெ. நிஷாந்தினி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை.

எந்தவொரு சமுதாயமும் அதற்கென சில சமுதாயக் கட்டமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு அவற்றை பேணிப்பாதுகாத்து வருகின்றது. அந்த வகையில் இருளப்பழங்குடி மக்களின் சமூகக் கட்டமைப்பானது ஐவர் கொண்ட குழுவாலேதான் நிர்வகிக்கப்படுகிறது. அதாவது ஊர்மூப்பன், மண்ணுக்காரன், வண்டாரி, குருவன், குருதலை ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குவர். இந்த ஐவர் குழுவில் யாரேனும் ஒருவர் இல்லையென்றாலும் எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது. இருளப்பழங்குடி மக்களிடம் பன்னிரெண்டு குலங்கள் காணப்படுகின்றன. பெண்களுக்குத் திருமணத்தின் போது ஏழுகுலங்கள் ஒன்றாகக் கூடிக் கருப்புத்தாலியைத் தொட்டுக் கொடுத்து நடைபெறும் திருமணத்திற்குத் தான் அந்த மக்களால் சமூக அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மஞ்சல் தாலி மட்டும் கட்டிக்கொள்ளும் தம்பதியர்கள் இந்தச் சமூகத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்குக் கொண்டாலும் முழு உரிமை வழங்கப்பட மாட்டாது. கணவன், மனைவி இருவரில் யாரேனும் ஒருவர் இறந்தால் கூட இருளர் விழாக்களில் கலந்து கொள்ளமுடியாது. மனைவி இறந்துவிட்டால் கணவன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு விழாக்களில் கலந்து கொள்ளலாம். ஆனால் கணவனை இழந்த பெண் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளக் கூடாது. தனக்குப் பிடித்தவருடன் தாலி, பூ, பொட்டு இல்லாமல் வாழலாம்.

மேலும், பிற இனத்தவர்களை இருளப் பெண்கள் திருமணம் செய்து கொண்டால் அவர்களை இறந்தவர்களுக்குச் சமமாகவே மதிப்பர். மாதவிடாய் காலங்களில் பெண்கள் எந்தப் பொருளையும் தொடக்கூடாது. அவர்களுக்காகத் தட்டு, தம்ளர் எனத் தனியாக வைக்கப்பட்டிருக்கும். அந்த ஊரில் மாதவிலக்காகும் பெண்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி ஒரு பொதுவான இடங்களில் உண்டு, உறங்கி வருவார்கள்.

கறுப்புத்தாலி அணியாத பெண்கள், சமுதாய அங்கீகாரம் பெறாதவர்களில் யாரேனும் இறந்துவிட்டால் அவர்கள் இருளர் சுடுகாட்டில் புதைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். திருமணம் ஆகாத ஆண், திருமணமாகாத பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டால் அந்தப் பெண்ணின் சம்மதத்தின் பேரில் ஊர்சபை முன்பு திருமணம்